**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பொதுப்பணித்துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு எஸ்.கங்காதரன், த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு எம்.சத்தியமூர்த்தி – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின்அரசாணைக்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவுகளைத் தளர்த்தியும் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (பி1) துறை**

அரசாணை (3ப) எண். 75

நாள் : 22.10.2020
சார்வரி, ஐப்பசி 06.
திருவள்ளுவர் ஆண்டு 2051

**படிக்கப்பட்டன:**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கடித எண். சி2/9076/2018, நாள் 10.06.2019.
3. அரசாணை (நிலை )எண்.18, தொழிலாளர் வேலைவாய்ப்பு(க்யூ.1)த்துறை, நாள் 23.01.2020.

------

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித்துறையைச் சார்ந்த கட்டட அமைப்பு/ மண்ணச்சநல்லூர் பொதுப்பணித்துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டத்தில் தலைமைப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு எம்.சத்தியமூர்த்தி 05.05.2006 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ மகனான திரு எஸ்.கங்காதரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவி அளிக்கப்பட்டு, அவர் 27.08.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அவர் அப்பதவிக்குண்டான குறைந்தபட்ச கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு தேர்வில் மார்ச் 2007–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 27.05.1991 ஆகும் என்றும், அவர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, தனியர் திரு எஸ்.கங்காதரன் என்பவரின் பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து, தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் அவர்களின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திரு. எம்.சத்தியமூர்த்தி, தலைமைப் பணியாளர், பொதுப்பணித் துறையில் பணியிலிருக்கும் போது 05.05.2006 அன்று காலமாகியுள்ளார். திரு எஸ்.கங்காதரன் என்பவரின் பிறந்த தேதி 27.05.1991 ஆகும். அரசு ஊழியர் இறந்த போது தனியரின் வயது 14 ஆண்டுகள், 11 மாதங்கள். அரசு ஊழியர் திரு எம்.சத்தியமூர்த்தி இறந்து மூன்று ஆண்டுகளுக்குள், 31.08.2007 அன்று அவரது வாரிசுதாரர்/ மகனான திரு எஸ்.கங்காதரன் தனக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வழங்குமாறு விண்ணப்பம் அளித்துள்ளார். விண்ணப்பம் அளிக்கும் போது தனியரின் வயது 16 ஆண்டுகள், 3 மாதங்கள் ஆகும். பத்தாம் வகுப்பில் மார்ச் 2007–இல் தேர்ச்சிப் பெற்றுள்ளார். தனியர், 27.08.2018 முற்பகல் அன்று பொதுப்பணித்துறையில்

இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்துள்ளார். அரசு ஊழியர் இறந்து மூன்று ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் பணிகோரி விண்ணப்பம் அளிக்கப்பட்டிருந்தாலும், விண்ணப்பிக்கும் நாளன்று தனியர் 18 வயதினை நிறைவு செய்யவில்லை. இச்செயல் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ.1)த்துறை, நாள் 23.01.2020–க்கும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016, பிரிவு 20(6)(b)–க்கு முரணானதாகும். எனவே, தனியரின் பணியினை வரன்முறை செய்ய மேற்காண் அரசாணைக்கு விலக்கும், சட்டப் பிரிவிற்குத் தளர்வும் அளிக்க வேண்டியுள்ளது.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 27.08.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு எஸ்.கங்காதரன் என்பவரின் பணியினை அவர் அப்பதவியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்திடவும் மற்றும் பணி நியமன நாளிலிருந்து பணப்பலன்கள் அளிக்கவும் ஏதுவாக, தனியர்பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு(க்யூ.1)த்துறை, நாள் 23.01.2020–க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இல் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை அச்சட்டத்தின் பிரிவு 58–இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தளர்வு செய்தும், கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித்துறையில், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனத்துக்குரிய உடற்தகுதிப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் திரு எஸ்.கங்காதரன் என்பவரின் பணியினை 27.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்நாளிட்டு பணிவரன்முறை செய்வதால் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அ.சா.எண். 15200/ட்டி.1 /2020, நாள் 13.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா.எண். 26135/ஜி1/2020–1, நாள் 16.10.2020 – இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
திரு எஸ்.கங்காதரன், இளநிலை உதவியாளர்,
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20 வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை/ பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, சென்னை – 9.
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை–5.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

28.10.20